பக்கங்கள் 17 + 06

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 03 திங்கட்கிழமை 19.08.2024 | அதிர்வு 18

## சஜித்தின் விஞ்ஞாபனம் 22 ஆம் திகதி வெளியீடு

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தமது கட்சியின் அரசியல் பொறிமுறை என்ன என்பது தொடர்பான அறிவிப்பை எதிர்வரும் 22 ஆம் திகதி சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய 04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# செப்டெம்பர் 22 இல் அரியணை ஏறுவோம்



## பரப்புரைக் கூட்டத்தில் அநுர நம்பிக்கையுடன் தெரிவிப்பு

"வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் ஆணை தேசிய மக்கள் சக்தி கட்சிக்குக் கிடைக்கும். மறுநாள் 22ஆம் திகதி நாம் ஆட்சிப்பீடம் ஏறுவோம்."

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க 02

## செல்வச்சந்நிதி தேர்த் திருவிழாவில் 35 பவுண் நகைகள் 'அபேஸ்'

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டைமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் தேர்த் திருவிழாவில் கலந்துகொண்டிருந்த பக்தர்களின் சுமார் 35 பவுண் தங்க நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சிறப்புமிக்க செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த் திருவிழா நேற்று நடைபெற்றது.

இதில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பெருந்திரளான பக்தர்கள் ஆலயத்துக்கு வருகை தந்து தேர்த் திருவிழாவை நேரில் கண்டு களித்தனர்.

அதன்போது ஆலயச் சூழல்களில் சனநெரிசல்களைப் 04

















## செப்டெம்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

சிங்கப்பூருக்குத் தப்பியோடிய மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை இலங்கைக்குக் கொண்டு வருவதே தேசிய மக்கள் சக்தி அரசின் முன்னுரிமைக்குரிய விடயம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிரிபத்கொடையில் நேற்று நடைபெற்ற கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "அரசின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடனேயே தேசிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றும். ஊழல், மோசடியை ஒழிக்கும்.

வரி செலுத்தாமல் உள்ள பலரிடமிருந்து 169 பில்லியனைப் பெற முடியும். அவர்களை அடையாளம் கண்டுள்ளோம். அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம்." - என்றார்.

# பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பொல்லால் தாக்கிக் கொலை!

## சந்தேகத்தில் மூவர் கைது

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பொல்லால் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தங்காலை, கதுருபொகுன பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் உட்பட மூன்று பேர் தங்காலை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் தங்காலை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பிரதான சந்தேகநபர் கண்டி பிரதேசத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

தங்காலை, கதுருபொகுன பகுதியில் வசிக்கும் 33 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபரிடமிருந்து ரி – 56 ரக துப்பாக்கி, 12 தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தங்காலை பிரதேசத்தில் உள்ள பாழடைந்த வீடொன்றில் தலைமறைவாக இருந்த ஏனைய இரண்டு சந்தேகநபர்களும் இன்று காலை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# கட்சி தாவும் தவளை அரசியலுக்கு எமது ஆட்சியில் முடிவு கட்டுவோம்

## தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர திட்டவட்டம்

கட்சி தாவும் தவளை அரசியலுக்குத் தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் முடிவு கட்டப்படும் என்று அக்கட்சியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் மேலும் உரையாறுகையில்,

"இந்தப் பக்கம், அந்தப் பக்கம் எனக் கட்சி தாவல்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இப்படியான தவளை அரசியலை நாட்டு மக்கள் கடுமையாக எதிர்க்கின்றனர். எனவே, தவளை அரசியலுக்கு முடிவு கட்ட வேண்டும்.



எமது நாட்டுக்குக் கொள்கை அடிப்படையிலான அரசியலே தேவைப்படுகின்றது. அந்த வழியிலேயே எமது அணி பயணிக்கின்றது. தாவும் அரசியல் தவளைகளுக்கு எமது அணியில் இடமில்லை.

இவ்வாறு தாவும் தவளைகள் இணைந்து கூட்டணிகள் அமைத்திருந்தாலும் அவை எமக்குச் சவாலாக அமையாது. கட்சி தாவினால் நாடாளுமன்ற உறுப்புரிமையை இரத்துச் செய்வதற்குரிய சட்டம் இயற்றப்படும். தற்போது அந்தச் சட்டம் இருந்தாலும் அதனைப் பலப்படுத்தும் வகையில் திருத்தம் கொண்டுவரப்படும். அசிங்கமான அரசியல் கலாசாரத்துக்கு முடிவு கட்டப்படும்." – என்றார்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஓட்டோ சாரதி ஒருவர் படுகொலை

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஓட்டோ சாரதி ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அருப்பிட்டிய பிரதேசத்தில் ஓட்டோக்களைப் பழுது பார்க்கும் இடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தக் கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

45 வயதுடைய ஓட்டோ சாரதியே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பத்தரமுல்ல, தலங்கம பிரதேசத்தில் வசிக்கும் 31 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்டவர் கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து கடனாகப் பணத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார். இந்நிலையில், கொலை செய்யப்பட்டவர் கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு அந்தப் பணத்தைத் திருப்பித் தராததால் இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இந்த வாக்குவாதம் எல்லை மீறியதால் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தலங்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் விடுதியில் தங்கியிருந்த மூன்று யுவதிகள் இன்று கைது!



யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் சந்தேகத்துக்கிடமான முறையில் தங்கியிருந்த மூன்று யுவதிகள் இன்று திங்கட்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் – கண்டி நெடுஞ்சாலையில் மாவட்ட செயலகத்துக்குச் சற்றுத் தொலைவில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் சந்தேகத்துக்கிடமான முறையில் ஆள் நடமாட்டம் உள்ளது என்று யாழ். பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த விடுதிக்குப் பொலிஸார் சென்று சோதனையிட்டனர்.

அதன்போது, விடுதியில் எவ்வித பதிவுகளும் இன்றி தங்கியிருந்ததுடன், தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறிய மூன்று யுவதிகளைப் பொலிஸார் கைது செய்தனர்.

மேற்படி மூன்று யுவதிகளையும் விசாரணைகளின் பின்னர் யாழ். நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய வேளை, அவர்களை எதிர்வரும் 26ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், மூவரையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### செல்வச்சந்நிதி...

பயன்படுத்தித் திருடர்கள் தம் கைவரிசைகளைக் காட்டியுள்ளனர்.

பல பக்தர்களின் பெறுமதியான தங்க நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன. தமக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் சுமார் 35 பவுண் நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### சஜித்தின்...

மக்கள் கூட்டணி வெளியிடவுள்ளது எனத் தெரியவருகின்றது.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கியுள்ள சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்பில் வெளியிடப்பட்டுள்ளது.

தமது ஆட்சியின் கீழ் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள், பொருளாதார மீட்சித் திட்டங்கள், வெளிவிவகாரக் கொள்கை என்பன உள்ளிட்ட விடயங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பட்டியிலிடப் படவுள்ளன. அத்துடன், தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் பற்றிய உறுதிமொழியும் வழங்கப் படவுள்ளது. மலையகத் தமிழ் மக்களுக்கான அரசியல், பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுத் திட்டங்களும் சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்படவுள்ளன.




# ரயில் - லொறி விபத்தில் ஒருவர் பரிதாப மரணம்!

ரயில் கடவைக்கு அருகில் இடம் பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கொஸ்கொட, இதுருவ பிரதேசத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.


கொஸ்கொடையிலிருந்து விறகுகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்றும் காலியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின்போது, லொறியில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதுருவ பிரதேசத்தில் வசிக்கும் 55 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த நபர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்கொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# ஹெரோயினுடன் இளைஞர் ஒருவர் கைது!

மொரட்டுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லுணாவ சந்திக்கு அருகில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 5 கிராம் 450 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரட்டுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# திரிசங்கு அபயம்

பூலோகத்திலும் இடமில்லாமல், சொர்க்கத்திலும் இடம் வழங்கப்படாமல் நடுவில் அந்தரித்த திரிசங்குக்கு அவனுக்கென்றே இடைவழியில் சொர்க்கம் ஒன்றை உருவாக்கிக் கொடுத்தாராம் விசுவாமித்திரர்.

அது போன்று இடைவழியில் ஒரு கட்சியை தமக்கென உருவாக்க வேண்டிய கட்டாயத்தில் நிற்கின்றார்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து கூண்டோடு வெளியேறி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கத் தீர்மானித்த மொட்டுக்கட்சி அதிருப்தியாளர்கள் என்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் வெல்லக்கூடிய ஒரு வேட்பாளரின் பின்னால் அணி வகுத்து நிற்பது தங்களது எதிர்காலத்துக்கு சாதகமானது என்று கருதிய அவர்கள் அதற்காகத் தமது கட்சியான மொட்டுத் தரப்பை நடுவழியில் கைவிட்டு விட்டு, கூட்டமாக வெளியேறி வந்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பின்னால் அணிவகுத்துள்ளனர். அதனால் மீண்டும் மொட்டுக்கட்சிக்குத் திரும்ப முடியாமல் அவர்களுக்கு மொட்டுக் கதவடைத்து விட்டது.

இந்த ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெல்லலாம். அல்லது தோற்கலாம். எது நடந்தாலும், அதன் பின்னர் அறிவிக்கப்படக்கூடிய பொதுத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து, தத்தமது பிரதேசங்களில் போட்டியிடுவது தங்களுக்கு வெற்றி வாய்ப்பைத் தராது என்ற யதார்த்தத்தை அவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பின்னால் அணிவகுப்பதற்காக இப்போது மொட்டை விட்டு வெளியேறி வந்தாலும், பின்னர் வரக்கூடிய பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்கு வேறு தளமோ, கட்சியோ இல்லாத திரிசங்கு நிலையில் தாங்கள் இருப்பதை அவர்கள் நான்கு உணர்ந்துள்ளனர்.

அதனால்திரிசங்குக்குபூலோகத்துக்கும் சொர்க்கத்திற்கும் இடையில் தனியான ஒரு சொர்க்கத்தை விசுவாமித்திரர் உருவாக்கியமை போன்று மொட்டு கட்சியிலும் இடமில்லாமல், ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சியிலும் சேர விரும்பாமல் இடைவெளியில் தத்தளிக்கும் மொட்டு அதிருப்தியாளர்களுக்கு புதிய கட்சி ஒன்றை ஸ்தாபிப்பது - அதுவும் எந்நேரத்திலும் வரக்கூடிய பொதுத் தேர்தலுக்கு முன்னர் அதனை உருவாக்கிச் செயற்பட வைப்பது - அத்தியாவசியமாகியிருக்கின்றது.

மொட்டு அதிருப்தியாளர்கள் குழுவினர் அதற்கான முயற்சியை சுறுசுறுப்பாகவும் முனைப்பாகவும் ஆரம்பித்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது. அதற்கான கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருவதை அந்தத் தரப்புடன் இயங்கும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனா உறுதிப்படுத்தி இருக்கின்றார்.

அந்த அரசியல் சக்தியை கட்டி எழுப்பப் பிரதமர் என்ற முறையில் தமது ஆசியையும் ஆதரவையும் தாம் தொடர்ந்து வழங்குகிறார் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கும் முடிவை எடுத்த பல எம்.பிக்களும் மொட்டுக் கட்சியின் சார்பில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தேர்வாகி வந்திருந்தாலும், பூர்வாங்கமாக அவர்கள் பல்வேறு உதிரிக் கட்சிகளையும் அமைப்புகளையும் சேர்ந்தவர்கள். இனி அவர்கள் மொட்டுக்கு கட்சியின் பட்டியலிலோ அணியிலோ சேர்ந்து பொதுத்தேர்தல்களை எதிர்கொள்ள முடியாது என்பதனால் அவர்களுக்கான ஒரு தளம் - கட்சி - கூட்டணி - கிடைக்காது என அவர்கள் அஞ்சத்த தேவையில்லை என்று கூறுகின்றார் பிரதமர் தினேஷ் குணவர்த்தனா.

அடுத்த பொதுத் தேர்தலில் வேட்பாளர் நியமனம் தங்களுக்கு கிடைக்காது என்று அவர்கள் யாரும் அஞ்சத் தேவையில்லை என்று குறிப்பிட்டுள்ள பிரதமர் தினேஷ் குணவர்த்தனா அவர்களுக்கான இடத்தை உறுதிப்படுத்தும் வகையில் புதிய கட்டமைப்பு உருவாக்கப்பட்டு கொண்டிருக்கிறது என்றும் உறுதிபடக் கூறி இருக்கிறார்.

# தேசிய மக்கள் சக்திக்கு 07 அம்ச கோரிக்கையை முன்வைத்துள்ளது கிழக்கின் கேடயம் அமைப்பு!

(நூருல் ஹுதா உமர்)

தேசிய மக்கள் சக்தியினரின் அழைப்பின் பேரில் கிழக்கின் கேடயம் அமைப்பினருடனான சந்திப்பு தேசிய மக்கள் சக்தியின் ராஜகிரிய தலைமையகத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஜனாதிபதி வேட்பாளரிடம் முன்வைக்கும் கோரிக்கைகளை கிழக்கின் கேடயம் தலைமை ஒருங்கிணைப்பாளர் எஸ்.எம்.சபீஸ் தேசிய மக்கள் சக்திக்கு முன்வைத்தார்.



கிழக்கின் கேடயத்தின் ஒப்பந்த நிபந்தனைகளாக 21 வயதுக்குள் அடிப்படை (3 எஸ்) தகுதிடைய அனைத்து மாணவர்களும் பட்டப்படிப்பைப் பெறுவதற்கு வழி அமைத்தல். அதனை உற்பத்தி பொருளாதாரம், முயற்சியாண்மை, கடல்சார் நீரியல் வளங்கள், மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றுடன் இணைந்ததான திட்டங்களை உருவாக்குதல்.

கிழக்கு மாகாணத்தின் வளங்களை மையப்படுத்தி புதிய தொழிற்சாலைகளை உருவாக்குதல், மருதமுனையில் நெசவு தொழிற்சாலை, ஒலுவிலில் டின் மீன் தொழிற்சாலை போன்ற மாவட்ட வளங்களை பயன்படுத்தும் விதமாக கைத்தொழில் பேட்டைகள் உருவாக்குதல், வேளாண்மை பயிர் செய்கையை இரண்டிலிருந்து மூன்று போகமாக மாற்றுவதற்கு உரிய திட்டங்களை செயற்படுத்தல்.

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் நிர்வாக பயங்கரவாதம் மற்றும் காணி பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு பெற்றுத்தரல், தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மருத்துவம், சட்ட மற்றும் கல்வி பீடத்தை ஆரம்பித்தல், அனைத்து மாவட்டத்தின் மத்திய பகுதியில் அமைய கூடியவாறு மக்களுடன் தேவையுடைய அரச அலுவலகங்களை நிறுவுதல். (உதாரணமாக ஆட்பதிவு திணைக்கள காரியாலயம், குடிவரவு குடியகல்வு திணைக்கள காரியாலயம், சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் காரியாலயம் போன்றன).

இலங்கையின் சுற்றுலாத்துறை கேந்திர நிலையங்களாக இருக்கும் அறுகம்பே மற்றும் பாசிக்குடா ஆகிய இடங்களை வெளிநாட்டு உள்நாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் அபிவிருத்தி செய்தல் போன்ற பல்வேறு வகையான ஒப்பந்தங்களை கிழக்கின் கேடயம் அமைப்பினர் முன்மொழிந்துள்ளனர்.

இந்தச் சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் பொதுச் செயலாளர் டாக்டர் நிஹால் அபேசிங்க கலந்து கொண்டிருந்தார்.







# சஜித்துக்கு ஆதரவாக அம்பாறையில் பால்சோறு!

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுவில் கையொப்பமிட்ட மறுகணம் அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக பட்டாசு கொளுத்தி பால் சோறு வழங்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச இணைப்பாளர் வெள்ளையன் வினோகாந்த் தலைமையில் புதிய வளத்தாப்பிட்டி பிரதேசத்தில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

மாவட்ட அமைப்பாளர் சந்திரதாச கலப்பதியும் கலந்து கொண்டார்.

முதலில் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடு இடம் பெற்றது. பின்பு பட்டாசு கொளுத்தி பால் சோறு வழங்கப்பட்டது. கூடியிருந்தவர்களுக்கும் மற்றும் வீதியால் சென்றவர்களுக்கும் இந்த பால் சோறு வழங்கப்பட்டது.

இணைப்பாளர் வினோகாந்த் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நிச்சயம் சஜித் பிரேமதாஸவை எதிர்கால ஜனாதிபதி ஆக்குவதற்கான முழு முயற்சிகளில் நாட்டு மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களைக் கட்டாயம் ஜனாதிபதி ஆசனத்தில் அமர வைப்பது உறுதி என்ற தீர்மானத்துடன் பலரும் உள்ளனர்.

சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாக வரும் பட்சத்தில் இந்நாட்டின் வாழக்கூடிய ஏழைகளுக்கான நல்லாட்சி, மற்றும் சமகாலத்தில் காணப்படக் கூடிய நடைமுறை சிக்கல்கள், நாட்டில் காணப்படக் கூடிய பிரச்சினைகளுக்கான நிரந்தர தீர்வுகள், கல்வி அபிவிருத்தி, சுகாதார அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி, கைத்தொழில் புரட்சி, சுயதொழில் முயற்சியால்களை ஊக்குவித்தல், நவீன விவசாய முறைகள், மீனவர்களுக்கான நலத்திட்டங்கள், பொருள்களின் விலை குறைப்பு, இன்னும் அதிக அபிவிருத்திகள் நாட்டில் உருவாகும் இதற்கு நிச்சயம் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாக வர வேண்டும். அவர் தான் வரவேண்டும். நிச்சயமாக அவர் வருவார். – என்றார்.

# நாட்டைப் பாதுகாத்த ஒருவரிடமே நாட்டை நாம் கொடுக்கவுள்ளோம்

## ஈரோஸ் பிரபா தெரிவிப்பு



(பழுவூரான்)

நாட்டைப் பாதுகாத்த – வரிசையை இல்லாமல் செய்தவரிடமே நாட்டை கொடுக்கவுள்ளோம் என்று மக்கள் தீர்மானித்துவிட்டார்கள் என ஈரோஸ் கட்சியின் செயலாளர் நாயகம் இரா. பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கல்லடியில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கும் நாள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆகும். இந்தத் தேர்தலில் 3 வேட்பாளர்கள் பிரதான வேட்பாளராக களமிறங்கி இருக்கின்றார்கள். ஆனால் அதில் உள்ள 3 வேட்பாளர்களும் மக்களை நேசிப்பவர்களாக இருந்து வருபவர்கள் என நாம் அறிவோம்.

கோட்டா நாட்டைக் காப்பாற்ற அழைப்பு விடுத்த போது நாட்டையும், மக்களையும் நேசித்து யாருமே முன் வந்து நாட்டை பெறுப்பேற்காத போது தனி ஒரு மனிதராக ரணில் நாட்டை பெறுப்பெடுத்து குறிப்பிட்ட காலத்தில் நாட்டை மீட்டெடுத்துள்ளார். இவருக்கு இன்னும் 5 வருடங்கள் வழங்கினால் நாட்டின் நிலையை எப்படி மாற்றுவார் என சிந்தித்துப் பாருங்கள்.

இன்று எனக்கு இரவு பகலாக பல பக்கங்களிலும் இருந்து அழைப்புக்கள். சஜித்துக்கு ஆதரவு வழங்குங்கள் ஏனையோருக்கு வாக்களியுங்கள் என்கிறார்கள், ஆனால் நாம் சிந்தித்தே செயற்படுவோம்.

நாட்டைப் பாதுகாத்த – வரிசையை இல்லாமல் செய்தவரிடமே நாட்டை கொடுக்கவுள்ளோம் என மக்கள் தீர்மானித்துவிட்டார்கள். இன்று மக்கள் முடிவெடுத்துவிட்டார்கள், மாற்றம் ஒன்றைக் கொண்டு வர வேண்டுமென்று தீர்மானித்து விட்டார்கள்.

மக்களின் எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்பவர் ரணில் என்பதை மக்கள் உணர்ந்து விட்டார்கள். மக்களுக்கு ஏதோ செய்ய வேண்டும் என நினைக்கும் ரணிலுடன் சேர்ந்து சஜித் ஏன் பிரதமராக சேவையாற்ற முடியாது.

ரணிலுக்கு 5 வருடம் ஜனாதிபதி பதவியை கொடுத்து விட்டு பிரதமராக சஜித் பிரேமதாசா இருந்தால் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த முடிவதுடன், அடுத்த 10 வருடங்கள் சஜித் ஜனாதிபதியாக இருக்கலாம். அதற்கு நாம் உதவ முடியும்.

மகிந்தவின் திருடர்கள் ரணிலுடன் சேர்ந்துள்ளதால் வாக்கு குறையும் என்பது பொய். ரணிலுக்கு ஆதரவாக 115 பேர் இருக்கின்றார்கள். ஒருவர் 50000 வாக்கை எடுத்து கொடுக்க முடியாதா? 65 லட்சம் வாக்கால் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க அறிவிக்கப்படுவார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்று ஒன்று இல்லை, இலங்கைத் தமிழரசுக் கட்சி தற்போது எத்தனையாக உள்ளது. தமிழ் மக்கள் சார்பாக ஒருவரை இறக்க வேண்டும் என யார் சொன்னது? மக்களிடம் கருத்து கேட்டீர்களா? மக்கள் உங்களிடம் தமிழ் வேட்பாளரைப் போட சொல்லிக் கேட்டார்களா?

யோக்கர் விளையாட்டு காட்ட வேண்டாம். படித்தவர்கள் எவ்வளவோ பேர் இருக்கின்றார்கள். அரியநேந்திரன் பாவம், அவருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என நன்கு தெரியும்.

ஈழவர் ஜனநாயக முன்னனி இம் மாதம் 20 ஆம் திகதியில் இருந்து ரணில் விக்கிரம சிங்கவின் வெற்றிக்காக பிரசாரப் பணிகளை ஆரம்பிக்கும்.

இன்று ரணிலைக் கொண்டு வந்து ஹிஸ்புல்லா பல்கலைக்கழகத்தை திறந்து விட்டு, மறுநாள் ஹிஸ்புல்லா ஹக்கீமுடன் இருந்து சஜித்துக்கு ஆதரவு வழங்கியது போல் ஈரோஸ் இல்லை.– என்றார்.

# மக்கள் அனைவரும் விரும்பும் ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக!

## ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு அமைப்பாளர் கருத்து

(பழுவூரான்)




உலக நாடுகளில் நன்கு அறிமுகமான திறமை மிக்க நாட்டுக்குப் பொருத்தமான அனைவரும் விரும்பும் ஒரு தலைவர் ஜனாதிபதி வேட்பாளராகியுள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் எஸ் சுதர்சன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

இன்று ஐக்கிய தேசியக் கட்சி என்று சொல்லாமல் அனைவரும் நாடாளுமன்றத்தில் அனைத்து அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களும் சரி கடந்த இரண்டு வருடமாக ஜனாதிபதி ரணிலுடன் இணைந்து பயணித்துக் கொண்டிருந்த வேளையிலே ஒரு விடயத்தை கண்டு பிடித்தார்கள்.

நாட்டுக்குப் பொருத்தமான தலைவர் ஒருவர் தற்போது ஆண்டு கொண்டிருக்கின்றார். நன்கு திறமையானவர். உலக நாடுகளில் நன்கு அறிமுகமானவர். திறமை மிக்கவர். அரச பணிளை சுதந்திரமாக செயல்பட செய்தவர். தமது திறமைகளுக்கு வழி விட்ட வரை நாம் கண்டு கொள்ளாமல் இருந்து விட்டோம்.

இந்த நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுவரச் செய்தவரை மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதியாக்கினால் என்ன என்று சிந்தியுங்கள்.

இந்த நிலையிலேயே இன்று அவர் அனைவரும் விரும்பும் ஒரு ஜனாதிபதி வேட்பாளராகியுள்ளார். நாங்கள் செய்ய வேண்டிய கட்சிப் பணிகளை இன்று அவர்களே முன்வந்து முன்னெடுத்து வருகின்றனர்.

தேர்தல் தினத்தன்று நீங்கள் நன்கு யோசித்து உங்கள் வாக்கை அளியுங்கள். இந்த நிலையில் உங்கள் எதிர்காலத்தைக் காப்பாற்றிக் கொள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிப்பதே சாலச் சிறந்தது.– என்றார்.

# தேசிய அடைவைப் பெற்றமைக்கு விருது வழங்கிக் கௌரவிப்பு!

(சர்ஜூன் லாபீர்)



இலங்கை சமூக பாதுகாப்பு சபையினூடாக முன்னெடுக்கப்படும் ஓய்வூதிய திட்டத்துக்குப் பயனாளிகளை இணைக்கும் தேசிய வேலைத் திட்டத்தை 2023 ஆம் ஆண்டிலும் சம்மாந்துறை பிரதேச செயலகம் தேசிய அடைவை அடைந்துள்ளது.

இதற்குத் தேசிய விருது வழங்கும் நிகழ்வு நோர்த்வே ஹோட்டலில் இடம்பெற்றது.

இதில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.முஹம்மது ஹனீபா, உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், விடய உத்தியோத்தர் எம்.றிபாத், சமுர்த்தி உத்தியோகத்தர் எம்.டக்கீட் ஆகியோர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.





# 2030 இல் யாவருக்கும் உறையுள் திட்டத்தின் 12ஆவது வீடு கையளிப்பு

(எஸ்.எம்.எம்.றம்ஸான்)

2030 ஆண்டின் வீடற்ற யாவருக்கும் உறையுள் என்னும் தொனிப்பொருளில் ஒ .சி. டி. அமைப்பினுடைய தலைவர் சமூக சேவகர் விஞ்ஞான முதுமாணி அஸ்மி யாசீன் தலைமையில் 12 ஆவது வீட்டின் நிர்மாணிப்பணி நிறைவு பெற்று பாவனையாளருக்குக் கையளிப்புச் செய்யப்பட்டது.

சம்மாந்துறை பிரதேசத்தில் வீடற்ற ஏழை மக்களுக்கு வீடு வழங்கும் வேலைத் திட்டத்தை மிக நீண்ட காலமாக அஸ்மி யாசீன் என்ற இளைஞன் செய்து வருகின்றார் .

2030 ஆண்டளவில் முடியுமான அளவு வீடற்ற ஏழைகளுக்கான வீட்டினை நிர்மாணித்து அவர்களுக்கு வழங்கும் தூர சிந்தனையை மையமாக கொண்டு பயணிக்கும் இவ் இளைஞனின் மற்றுமொரு மைக்கல்லாக 12 ஆவது வீடு கையளிக்கப்பட்டது.



கடந்த காலங்களில் 11 வீடுகளை மக்களிடத்திலே கைளித்துள்ள நிலையில் 12 ஆவது வீட்டைத் தெரிவு செய்த பாவனையாளருக்கு கையளிக்கும் நிகழ்வு செந்நெல் கிராமத்தில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு உலமாக்கள் , கல்விமான்கள், புத்திஜீவிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.





# புத்தாக்கச் செயன்முறை தொடர்பில் பயிற்சிப் பட்டறை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை மஹ்மூத் மகளிர் (தேசிய பாடசாலை) மாணவிகளை கல்வி நவீனமயமாக்கல், எதிர்கால உலகின் சவால்களை எதிர்கொண்டு இளம் கண்டுபிடிப்பாளர்கள், விஞ்ஞான பொறியியல் தொழிநுட்பம், செயற்கை நுண்ணறிவு மேம்படுத்தல் போன்றவற்றுக்குள் உள்வாங்கும் நோக்கில் புத்தாக்க ஆய்வகத்தின் மூலம் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் மின்சார தொடர்பானசெயன்முறைபயிற்சியைக்கல்லூரி மாணவிகளுக்கு வழங்கும் நோக்கில் ஆய்வகத்தின் இணைப்பாளர் எம்.எம். ஸாஹிறா பானு தலைமையில் பயிற்சி இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் கலந்து கொண்டார்.

மின்சார செயன்முறை பயிற்சி பட்டறையில் மின்சார காணொளி தொகுப்புக்கள், புத்தாக்க கண்டுபிடிப்புகள், பாததைகள், உபகாரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டு செயன்முறை பயிற்சிகள் மற்றும் கல்லூரியில் இடம்பெற்ற கணித முகாம் பங்குபற்றிய மாணவிகள் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான ஹாஜியானி எஸ்.எஸ்.எம். சமதா மசூது லெவ்வை, ஏ.எச். நதீரா, உதவி அதிபர் என்.டி. நதீகா, தொழினுட்ப பிரிவு ஆசிரியர்கள், மாணவிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் மாணவி வாசிப்புப் போட்டியில் மாவட்ட முதலிடம்




(நூருல் ஹுதா உமர்)

2024 ஆண்டுக்கான அகில இலங்கை தமிழ் மொழி தினப் போட்டியில் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலய மாணவி கே. பாத்திமா நிஸ்கா முதலாம் பிரிவு வாசிப்பு போட்டியில் கலந்து கொண்டு முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

இம்மாணவிக்கு பாடசாலை சமூகம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் இம் மாணவியின் வெற்றிக்காக தொடர் பயிற்சியளித்த பாடசாலையின் தமிழ் பாட ஆசிரியைகளான எம்.ஐ. நஜீமா, கைறுல் குலாசா, வகுப்பாசிரியர் எஸ்.எல்.நவாஹிர் மற்றும் சிறந்த வழிகாட்டல்களை வழங்கிய இணைப்பாட பொறுப்பு அதிபர்எம்.எப்.எம்.ஆர். ஹாதீம், பாடசாலை அதிபர் எம்.ஐ.சம்சுதீன், பிரதி அதிபர் எம்.எஸ்.எம். சுஜான் ஆகியோர்களுக்கு பாடசாலை சமூகம் நன்றிகளை தெரிவித்துள்ளது.

இந்த மாணவி எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண மட்ட போட்டியில் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்தப் பாடசாலை 2024 இல் இணைப்பாடவிதான போட்டிகளில் பல வரலாற்று வெற்றிகளை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மத சகவாழ்வுக்கான செயலமர்வு திருமலையில்




(ஹஸ்பர் ஏ.எச் )

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் திருகோணமலை பிரேதேச சர்வ சமயக் குழு மாதாந்த செயலமர்வு திருகோணமலை சர்வோதய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் சர்வசமய பெரியவர்கள் கல்வியலாளர்கள் அரச உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பௌத்த, இந்து சமய மரபுகள் சித்தாந்தங்கள் பற்றிய தெளிவுகள் விளக்கங்கள் பௌத்த சமயம் சார்பாக பிரேமரத்ன தேரர் இந்து சமயம் சார்பாக பத்மஸ்ரீ குருக்கள் விளக்கவுரை நிகழ்த்தினர்.





# கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியின் சூற்றுச் சூழலை அழகுபடுத்தும் திட்டம் ஆரம்பம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாடசாலையின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் சீராக இடம்பெறுவதற்கு உள் சூழலும் வெளிச் சூழலும் சுத்தமாகவும் சுகாதாரமாவும் அழகாகவும் இருக்க வேண்டும் என்பதற்கு இணங்க கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம்.றிஸாத் வழிகாட்டலில் சூழலை அழகுபடுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையைக் கவின்கலை உடையதாக அழகுபடுத்தும் வேலைத் திட்டத்தின் மூன்றாவது பகுதியின் செயற்பாடுகள் அதற்குப் பொறுப்பான ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் அலங்கார மரங்களை நடும் ஒரு பகுதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன் போது பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிர், பாடசாலை அதிபர் ஏ. ஜி. எம். றிசாத் ஆகியோர் அலங்கார மரங்களை நட்டு, இந்தத் திட்டத்தை அண்மையில் ஆரம்பித்து வைத்தனர்.



# ஊவா மாகாண ஆரம்பப் பிரிவு கற்றலை மேம்படுத்தத் திட்டம்

(நடராஜா மலர்வேந்தன்)

சப்ரகமுவ மாகாண கல்வி திணைக்களத்தின் கல்வி அதிகாரிகள், ஆரம்பப் பிரிவு ஆசிரியர் ஆலோசகர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோர் ஊவா மாகாணத்துக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டனர்.

ஊவா மாகாண பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படும் பல்மட்ட கற்பித்தல் – கற்றல் செயற்பாடுகளை மேற்பார்வை செய்து சப்ரகமுவ மாகாண பாடசாலைகளில் பல்மட்ட கற்பித்தல் – கற்றல் செயல்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில் பசறை கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோணக்கலை தமிழ் வித்தியாலயத்துக்கு வருகை தந்தனர்.

இதன்போது வகுப்பறை மாதிரி பல்மட்ட கற்பித்தல் – கற்றல் செயற்பாடுகளை பார்வையிட்டதோடு ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கற்றல் விருத்தி தொடர்பாக ஆசிரியர்களுடன் கலந்துரையாடி அனுபவங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இதன்போது ஊவா மாகாண கல்வி திணைக்கள அதிகாரிகளும் கொண்டனர்.



# மன்னார் மாவட்ட அரச அதிபருக்கு பொன் விழா!





**(மன்னார் லெம்பேட், வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரனின் ஐம்பதாவது பிறந்த தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்ட செயலக நலம்புரிச் சங்கத்தால் அரச அதிபரின் பிறந்த தினம் மிக சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

புதன் கிழமை (14) மன்னார் மாவட்ட செயலகத்தில் மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் திரு செல்வகுமார் அவர்களின் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

அத்துடன் இந் நிகழ்வில் விவசாயிகளுக்கான காப்புறுதி சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது. மேலும் அரச அதிபரின் பொன் விழாவை முன்னிட்டு மாவட்ட செயலக வளாகத்துக்குள் மோட்டார் வாகனங்கள் நிறுத்துமிடத்துக்கான அடிக்கல் வைக்கப்பட்டதுடன் ஞாபகர்த்தமாக மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட செயலகத்தில் கடமைபுரியும் அதிகாரிகள் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# ஜனனம் அறக்கட்டளை ஊடாக கிரிக்கெட், உதைபந்தாட்ட பயிற்சி





**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

“மாணவர் திறமைக்கான களம்” என்ற மகுட வாசகததுக்கு இணங்க கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தியின் எண்ணக் கருவில் உருவான “விளையாட்டின் ஊடாக இளையோர்களின் வாழ்வை வளப்படுத்துதல்” என்னும் கிறிக்கெட் மற்றும் உதைபந்தாட்ட பயிற்சிப் பாசறை அண்மையில் கொழும்பு இந்துக் கல்லூரியில் இடம் பெற்றது.

ஜனனம் அறைக்கட்டளை ஊடாக குறைந்த வசதியுள்ள தமிழ் பாடசாலைகளின் மாணவர்களது உள மற்றும் உடல் ரீதியான முன்னேற்றத்தையும் நற்பண்புகளையும் வளர்க்கும் நோக்கில் இது இடம்பெற்றது.

கொழும்பு இந்துக் கல்லூரியில் அதிபர் யோகேஸ்வரன் தலைமையிலும் ஐ .டி. எம். என் .சி .சர்வதேச கல்வி நிறுவனத்தின் விளையாட்டு உத்தியோகத்தர் அசோக் குமாரின் வழி நடத்தலிலும் விளையாட்டு ஒருங்கிணைப்பாளர் பிரசாந்தனின் ஒருங்கமைப்பிலும் கிறிக்கெட் மற்றும் உதைப்பந்தாட்டப் பயிற்சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதன் போது கல்லூரியைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் மிகவும் உற்சாகத்துடனும் உத்வேகத்துடனும் பயிற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.






# சிறுவர் உரிமையைப் பாதுகாக்கும் வேலைத்திட்டம் சம்மாந்துறையில்

(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் சிறுவர் உரிமைகளை மேம்படுத்தும் வேலைத் திட்டம் மட்டக்களப்பு உளநல உதவி நிலையத்தின் அனுசரணையில் இடம்பெற்றது.

செந்நெல் கிராமம்-01, மலையடிக் கிராமம்-01, தமிழ் பிரிவு-04 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் சிறுவர் உரிமைகள் பாதுகாக்கும் வேலைத் திட்டங்களின் ஒரு அம்சமாக சிறுவர் உரிமைகள் சார்ந்த விழிப்புணர்வு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பாதாகைகள் திறந்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு சம்மாந்துறை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு விழிப்புணர்வு வாசகங்கள் பதித்த பாதாகைகளை திரை நீக்கம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வுக்கு கௌரவ அதிதியாக மட்டக்களப்பு உளநல உதவி நிலையத்தின் இயக்குனர் அருட்தந்தை ஜீவராஜ் கலந்து கொண்டார். இந்த நிகழ்வுக்கு உளநல உதவி நிலையத்தின் அம்பாறை திட்ட இணைப்பாளர் எம். நிசாம், திட்ட உதவியாளர் எஸ்.தர்சிகா, பிரதேச செயலக சமூக சேவை பிரிவு பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதி ஏ.யூ.பசீல், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களான எம்.ஐ.எம். ஹரீமா, ஏ.ஜே.குறைசா, கிராம சேவகர்களான ஐ.எல்.எம்.ஒஜீஸ் கான், ஏ.எம் சித்தி பஸ்ரியா எம்.ஜலால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதேவேளை, சிறுவர் உரிமைகள் மேம்பாடு சம்மந்தமான சிறுவர்களின் கலாச்சார நிகழ்வும் கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றன. நிகழ்வில் கலந்து கொண்ட சிறார்களுக்கான பரிசில்களும் வழுங்கி வைக்கப்பட்டன.





# திருமலை கோணேஸ்வரா இந்து ஆசிரியர் கிரிக்கெட் சம்பியன்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை ஆர்.கே.எம். ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி ஆசிரியர் கழகத்தால் ஒழுங்கமைக்கப்பட்டு, நடத்தப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலை ஆண் ஆசிரியர்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் திருகோணமலை, ஆர்.கே.எம். ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி ஆசிரியர் அணி இறுதிப் போட்டியில் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் அணி 10 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றது. பதிலக்குத் துடுப்படுத்தாடிய திருகோணமலை ஆர்.கே.எம். ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி ஆசிரியர்கள் அணி 7.3 ஓவர்களில் ஒரு விக்கட் இழப்புக்கு 98 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இப் போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக த.நிறோசன் ஆசிரியரும், சிறந்த பந்து வீச்சாளராகக் க.கோபிநாத் ஆசிரியரும் தெரிவு செய்யப்பட்டனர்.



## தமிழக அமைச்சரவையில் விரைவில்

# மாற்றம்?

தமிழக அமைச்சரவையில் சில தினங்களில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது எனத் என தகவல் வெளியாகியுள்ளது.

அமைச்சரவை மாற்றத்தின்போது புதியவர்கள் சிலருக்கு வாய்ப்பு அளிக்கப்படலாம் என்றும், அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் இல்லாத மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வாய்ப்புள்ளது எனவும் அறியமுடிகின்றது. இதன்படி சேலம், திருவள்ளூர் போன்ற மாவட்டங்களுக்கு அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் அளிக்க வாய்ப்பு உள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி தமிழக அமைச்சரவை மாற்றப்படலாம் என்றும் ஏற்கனவே அமைச்சராக இருந்து நீக்கப்பட்ட ஒருவருக்கு மீண்டும் அமைச்சரவையில் வாய்ப்பு அளிக்கப்படவும் வாய்ப்புள்ளது எனவும் தெரிய வந்துள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் ஏற்கனவே 2 தடவைகள் அமைச்சரவை மாற்றம் நடைபெற்றுள்ளது.

உதயநிதி ஸ்டாலினுக்கு துணை முதலமைச்சர் பதவி கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வரும் நிலையில், அவரை துணை முதலமைச்சராக்கவும் வாய்ப்பு உள்ளது எனவும் நம்பப்படுகின்றது.

## முல்லைப்பெரியாறு: அமைச்சரின் கருத்துக்கு தமிழக காங்கிரஸ்

# கண்டனம்!



முல்லைப் பெரியாறு குறித்த ஒன்றிய அமைச்சர் சுரேஸ் கோபியின் கருத்துக்கு தமிழகக் காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை தமது கண்டணத்தை வெளியிட்டுள்ளார்.

“முல்லைப் பெரியாறு அணை தற்போது பாதுகாப்பானதாக இல்லை. எனவே, இந்த அணைக்குப் பதிலாக அருகில் புதிய அணை கட்ட வேண்டும். முல்லைப் பெரியாறு அணை இடிந்தால் யார் பொறுப்பு? நீதிமன்றம் பதில் சொல்லுமா? அல்லது நீதி மன்றங்களில் இருந்து அத்தகைய முடிவுகளைப் பெறுபவர்கள் பொறுப்பேற்பார்களா? இனியும் கேரளாவால் கண்ணீரில் மூழ்கியிருக்க முடியாது” என அமைச்சர் சுரேஸ் கோபி பேசியிருந்தார்.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை,

“உச்சநீதிமன்ற தீர்ப்புகள் தமிழ்நாட்டின் உரிமைக்கு பாதுகாப்பாக இருக்கும்போது, கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர் தமிழ்நாட்டின் நலன்களுக்கு விரோதமாக இத்தகைய கருத்துகளைக் கூறுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது.


ஒன்றிய அமைச்சர் சுரேஷ் கோபி, கேரள மாநிலத்திற்கு மாத்திரம் அமைச்சரா? இந்தியா முழுமைக்குமான அமைச்சரா என்பதை தெளிவுபடுத்த வேண்டும். சுரேஷ் கோபின் பேச்சுக் குறித்து பிரதமர் மோடி தலையிட்டு ஒன்றிய அரசின் நிலையை தெளிவுபடுத்த வேண்டும்.

ஏற்கனவே காவிரிப் பிரச்சினையில் அண்டை மாநிலமான கர்நாடகத்தோடு உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கிற நேரத்தில், இன்னொரு அண்டை மாநிலமான கேரள மாநிலத்துடன்



போராடுகிற நிலைக்கு ஒன்றிய அமைச்சர் சுரேஷ்கோபி தள்ளியிருப்பது மிகுந்த கண்டனத்திற்குரியது.

எனவே, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், ஒன்றிய அமைச்சர் சுரேஷ் கோபியின் முல்லைப் பெரியாறு அணை குறித்த கருத்தை பிரதமர் மோடியின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும்” என அவர் கூறி உள்ளார்.



# விண்வெளியில் வேகமாக நகரும் மர்மப் பொருளால் விஞ்ஞானிகள் குழப்பம்!

மணி நேரத்துக்குச் சராசரியாக ஒரு மில்லயன் மைல் வேகத்தில் நகரும் மர்மப் பொருள் ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. இதை விண் கல்லாகவோ நட்சத்திரமாகவோ வகைப் படுத்த முடியவில்லை என நாசாவால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகாயத்தில் நிறைந்துள்ள அதிசயங்கள் பெரும்பாலானவை இன்னும் கண்டறியப்படாமலேயே இருந்து வருகின்றன. காலங்காலமாக மனிதர்கள் விண்வெளியின் இரகசியங்களை அறிந்து கொள்வதில் தீரா வேட்கையுடன் செயலாற்றிவருகின்றனர். அறிவியல் வளர்ச்சி அந்தத் தேடுதலுக்கு பேருதவியாக அமைந்துள்ளது.

அந்த வகையில் உலகின் மிக மேம்பட்ட அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா, தற்போது விண்வெளியில் ஒரு மணி நேரத்துக்குச் சராசரியாக ஒரு மில்லயன் மைல் வேகத்தில் நகரும் மர்மப் பொருள் ஒன்றைக் கண்டறிந்துள்ளது. பால் வெளியை வீட்டு இந்தப் பொருளானது ஒரு மில்லயன் மைல் வேகத்தில் நகர்ந்துகொண்டிருக்கிறது.

'பிளானட் 9' என்ற திட்டத்தின்கீழ் நடந்த ஆய்வில் இந்தப் பொருளானது கண்டறியப்பட்டுள்ளது. இந்த மர்மப் பொருளுக்கு CWISE J1249 என்று விஞ்ஞானிகள் பெயர் சூட்டியுள்ளனர்.

இதை விண்கல்லாகவோ நட்சத்திரமாகவோ உறுதியாக வகைப் படுத்த முடியவில்லை எனவும், இந்தப் பொருளின் மையத்தில் ஹட்ரஜன் காணப்படவில்லை. எனவே, இதை வாயு நிறைந்த இராட்சத கிரகம் மற்றும் குறைந்த நிறை கொண்ட நட்சத்திரம் ஆகிய இரண்டு வரையறைக்கு இடைப்பட்ட பொருளாக வகைப்படுத்த முடியும் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.









# இந்தியாவா? பாகிஸ்தானா

## சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் குழம்பிய நியூயோர்க் மேயர்

அமெரிக்க வாழ் இந்தியர்கள் ஒன்றிணைத்து நியூயோர்க் நகரில் இந்திய சுதந்திர தினத்தை பேரணி நடத்தி பிரமாண்டமான முறையில் கொண்டாடினர்.

கடந்த 41 ஆண்டுகளாக நியூயோர்க்கில் இந்திய சுதந்திர தினப் பேரணி நடத்தப்பட்டுவரும் நிலையில் இந்த வருடம் நடந்த 42ஆவது பேரணியில் அயோத்தி ராமர் கோவில் மாதிரியும் இடம்பெற்றது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இந்தப் பேரணியில் அமெரிக்கா வாழ் இந்தியர்கள் முன் உரையாற்றிய நியூயோர்க் நகரின் மேயர் எரிக் ஆடம்ஸ், இந்தியா என்பதற்குப் பதிலாக பாகிஸ்தான் என்று பலமுறை தவறுதலாக உச்சரித்தார்.

"என்னை இந்த நிகழ்வுக்கு வர அனுமதித்ததற்கு மிகவும் நன்றி. உங்களை எனக்கு நீண்டகாலமாகத் தெரியும். குவீன்ஸ் நகர் லிட்டில் பாகிஸ்தானில் இருந்து ப்ரூக்லின் நகர் லிட்டில் பாகிஸ்தான் வரை நியூயோர்க் நகரின் நிர்மாணத்துக்கு அடித்தளமிட்டதில் முக்கிய பங்குவகிக்கிறீர்கள். நியூயோர்க் என்பது அமெரிக்காவின் நியூடில்லி. எனவே, உங்களின் சுதந்திரதினத்தை ஒன்றிணைந்து கொண்டாடுவோம்" என்று தெரிவித்தார்.

லிட்டில் இந்தியா என்று சொல்வதற்குப் பதிலாக லிட்டில் பாகிஸ்தான் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.


பக்கங்கள் 06

# கனடா முரசு

திங்கட்கிழமை 19/08/2024

## வடக்கு மனிடோபாவில் சமூக முடக்கம் அறிவிப்பு

வடக்கு மனிடோபாவில் உள்ள O-Pipon-Na-Piwin Cree Nation பகுதியில் வன்முறைத் தாக்குதல்கள் வெடித்தமையை அடுத்து அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப் பட்டது. நேற்று முன்தினம் 02



# கனடா ரயில் சேவைகள் வியாழனுடன் முடங்கும்?

## ரயில் சேவை நிறுவனங்களுடன் தொழிற்சங்க முரண்பாடு உச்சம்

**கனடா முன்னெப்போதும் இல்லாத வகையில் ரயில் சேவை முடக்கத்தின் விளிம்பை அடைந்துள்ளதாகச் செய்தி கள் வெளியாகியுள்ளன.**

**ரயில் சேவை முடக்கம் வரும் வியாழக்கிழமை தொடங்கும் என்று ரயில் சேவை நிறுவனங்கள் கூறுகின்றன. அதே சமயம் ரயில்வேத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்திற்கு தயாராகி இருக்கின்றனர் என தொழிற்சங்கம் அறிவித்திருக்கின்றது.**

ரயில்வே தொழிற்சங்கத் தொழிலாளர்களை வரும் வியாழக்கிழமை தொடக்கம் (வெளியில் விட்டு) பூட்டத் தொடங்கும் என்ற கதவடைப்புக்கான முன்னறிவித்தலை கனடாவின் இரண்டு முக்கிய ரயில் நிறுவனங்களில் ஒன்றான கனடியன் நேஷனல் ரயில்வே, கனடாவில் உள்ள தொழிலாளர் நல அமைப்பான டீம்ஸ்டர்ஸ் யூனியனுக்கு ஞாயிற்றுக்கிழமை முறைப்படி வழங்கியிருக்கின்றது.

“தொழிலாளருடான முரண்பாட்டுக்கு உடனடி மற்றும் திட்டவட்டமான தீர்வு இல்லாவிட்டால், கனடியன் நஷனல் ரயில்வேக்கு அதன் வலையமைப்புப் பணிகளைக் கட்டம் கட்டமாகப் பணிநிறுத்தத்தை நோக்கி முன்நகர்த்துவதைத் தவிர C2






# கைகள் அற்ற பெண்ணுக்கு கனடாவில் ஓட்டுனர் உரிமம்

கனடாவில் இரண்டு கைகளும் இல்லாத பெண் ஒருவருக்கு ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஏழு ஆண்டுகளாக அந்தப் பெண் சட்ட ரீதியான போராட்டத்தை மேற்கொண்டு ஓட்டுனர் உரிமத்தை பெற்றுக் கொண்டுள்ளார்.

ஒஸ்போர்ன் என்ற பெண்ணே இவ்வாறு ஓட்டுநர் உரிமத்தை பெற்றுக் கொண்டுள்ளார்.

இந்த பெண் பிறக்கும் போது இரண்டு கைகளும் இல்லாமல் பிறந்தார் என்பதுடன் கால்களும் உயரம் குறைந்தவையாகக் காணப்பட்டன.

மொன்றியாலில் பிறந்த ஒஸ்போர்ன் றொரன்டோவில் வளர்ந்தார் என்பதுடன் பின்னர் ஹமில்டனுக்கு குடி பெயர்ந்துள்ளார்.

பின்னர் கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் ஒஸ்போர்ன், லாஸ் வேகாசில் வாழ்ந்து வருகின்றார்.

இரண்டு கைகளும் இல்லாத கால்களின் உயரமும் குறைந்த இந்த பெண்ணுக்கு செலுத்தக்கூடிய வகையிலான வாகனம் ஒன்றை விசேடமாக வடிவமைக்க வேண்டி இருந்தது.

இதற்காக சுமார் ஒரு லட்சம் டொலர்கள் தேவைப்பட்டன.

ஒஸ்போர்ன், ஏழு ஆண்டுகால கடின முயற்சியின் பின்னர் வாகனத்தை விசேடமாக வடிவமைத்து ஓட்டுனர் உரிமத்தை பெற்றுக் கொண்டுள்ளார்.

ஃபுச்சியா மினி கூப்பர் ரகக் காரில் அவர் நீட்டிக்கப்பட்ட அக்ஸிலேட்டர் மற்றும் பிரேக் பெடல்கள், தொடுதிரை மற்றும் மாற்றியமைக்கப்பட்ட ஸ்டீயரிங் ஆகியவற்றைப் பயன்படுத்தி காரை ஓட்ட முடியும்.


## வடக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவு முழுவதும் சமூக முடக்கம் கொண்டுவரப்பட்டது. அது முழு அடைப்புக்கு வழிவகுத்தது.

ஒரே இரவில் மூன்று கத்திக் குத்துச் சம்பவங்கள் நடந்தன என நகரத் தலைமை அதிகாரி கூறினார். அதில் ஒன்று "மிகவும் தீவிரமானது" என்றும் அவர் விவரித்தார், ஆனால் ஆபத்தானது அல்ல என்றும் கூறப்பட்டது.

அதே நேரத்தில், "ஆல்கஹால் தொடர்பான பல நடவடிக் கைகளுடன்" மற்ற தாக்குதல்களும் நடைபெறுகின்றன என அவர் கூறினார்.




## கனடா ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேறு வழியில்லை, இது முழுக் கதவடைப்பில் முடிவடையும்" என்று அது ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

"வார இறுதியில் பேச்சுவார்த்தைகள் இருந்தபோதிலும், அர்த்தமுள்ள முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை, மேலும் தரப்புகள் முரண்பட்ட் வெகு தொலைவு நிலையில் உள்ளன." - என்று கூறப்பட்டது.

கனடாவின் மற்ற முக்கிய ரயில் இயக்க நிறுவனமான 'கனடியன் பசிபிக் கன்சாஸ் சிட்டி' வரும் வியாழன் தொடக்கத்தில் இருந்து உறுப்பினர்களுக்குக் கதவடைப்பைத் தொடங்கும் என்று டீம்ஸ்டர்ஸ் யூனியனிடம் ஏற்கனவே கூறியுள்ளது.

இதன் பொருள், நிறுவனங்களுக்கும் டீம்ஸ்டர்ஸ் யூனியனின் அந்தந்தத் தரப்புகளுக்கும் இடையில் கடைசி நிமிட தொழிலாளர் ஒப்பந்தங்ள் எதேனும் ஏற்பட்டாலே தவிர, கனடாவில் பெரும்பாலான ரயில் போக்குவரத்து வியாழன் வாக்கில் நிறுத்தப்படும் என்பதுதான்.

'கனடியன் பசிபிக் கன்சாஸ் சிட்டி' நிறுவனத்துக்கு டீம்ஸ்டர்ஸ் யூனியன் தரப்பினரும் தனித்தனியாக 72 மணிநேர வேலைநிறுத்த அறிவிப்பை ஞாயிற்றுக் கிழமை பிற்பகுதியில் வெளியிட்டனர்.

"கடைசி நிமிட ஒப்பந்தங்களை தரப்புகளிடையே எட்டப்படாவிட்டால்,ஓகஸ்ட் 22 வியாழன் அன்று 00:01 மணிக்கு வேலை நிறுத்தம் ஏற்படும்" என்று அது ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பேச்சுவார்த்தையில் நேர்மையான நம்பிக்கைத்தன்மையுடன் எதிர்த் தரப்பு இல்லை என நிறுவனங்களும் தொழிற்சங்கமும் ஒருவருக்கொருவர் மாறி, மாறி குற்றம் சாட்டினர்.

கனடியன் நேஷனல் ரயில்வே நிறுவனம் மற்றும் கனடியன் பசிபிக் கன்சாஸ் சிட்டி நிறுவனம் ஆகியவை தொழிலாளர் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கும் சலுகைகளை கோருகின்றன என்று தொழிற்சங்கத்தினரான டீம்ஸ்டர்கள் தரப்பினர் கூறுகிறார்கள். ஆனால் அதனை இரண்டு நிறுவனங்களும் மறுக்கின்றன.

கனடியன் நேஷனல் ரயில்வே நிறுவனம் மற்றும் கனடியன் பசிபிக் கன்சாஸ் சிட்டி நிறுவனம் ஆகிய இரண்டும் ரயில்வேயில் உள்ள 9,300 தொழிலாளர்களின் சாத்தியமான வேலை நிறுத்தங்களுக்குத் தயாராகும் வகையில் ஏற்றுமதிப் பணியை நிறுத்தியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.



# உயிர்ப்புடன் இருக்கும் ஏழு மரங்களில் பேய் முகங்களைச் செதுக்கியவர் கைது

## இது கலைச் சிறப்பா, நாசவேலையா என்று விவாதம்

ஒன்றாரியோவின் வெல்லாண்டில் ஏழு உயிருள்ள மரங்களில் பேய் முகங்களை உளியால் செதுக்கிய சூத்திரதாரி பிடிபட்டுள்ளார் என நயாகரா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாற்பது வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். ஏழு உயிருள்ள மரங்களின் தண்டுகளில் விரிவான முகங்களை உளியால் செதுக்கிய குறும்பின் மூலம் ஐயாயிரம் டொலருக்கும் மேல் சேதம் ஏற்படுத்தினார் எனக் குற்றம் சாட்டப்பட்டார் நயாகரா பிராந்திய போலீஸ் சேவையின் கான்ஸ்டபிள் மைக்கேல் மலாச்சோவ்ஸ்கி கூறினார்.

திங்களன்று அந்த நபர் மீது குற்றம் சாட்டப்பட்டது, எனினும் பிணை நிபந்தனைக்கு இணங்கத் தவறியமையால் பிணை மனு மீதான விசாரணைக்காக இந்த வாரம் வரை அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

வெல்லாண்டில் உள்ள இந்த மரச் சிற்ப வேளைகள் தொடர்பான பொலிஸ் விசாரணையும் நடவடிக்கையும் இது கலைச் சிறப்பா அல்லது நாசவேலையா என்ற விவாதத்தைக் கிளப்பியுள்ளன.

கடந்த மாதம் வெல்லண்டின் சிட்டி ஹால் அருகே மரங்களில் பேய் முகங்கள் பொறிக்கப்பட்டமையை அடுத்து பொலிஸ் விசாரணை தொடங்கியது.

வெல்லண்ட் டவுன்டவுன் வணிக மேம்பாட்டுப் பகுதி சமூக ஊடகங்களில் அவற்றை "தனித்துவச் சிறப்பு மிக்க செதுக்குதல் துண்டுகள்" என்று விவரித்தாலும், நகர அதிகாரிகள் வெட்டுக்கள் மீள முடியாத சேதத்தை ஏற்படுத்தியுள்ளன என்று கூறினர்.

மேற்படி நோர்வே மற்றும் மனிடோபா மேப்பிள்ஸ் ரகத்தைச் சேர்ந்த பிரபல்யமான ஐந்து மரங்களின் ஊட்டச்சத்துக்களைக் கொண்டு செல்லும் திறன் இச்செதுக்குதலினால் சீர்குலைந்துள்ளது என்று வெல்லண்ட் ஊழியர்கள் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

மேலும் இப்போது தீங்கு விளைவிக்கும் நோய்கள் மற்றும் பூச்சிகளால் அந்த மரங்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றன என்றும் கூறுகின்றனர்.

"இந்த [வெட்டுகள்] மரத்திற்கு தீங்கு விளைவிப்பவை மட்டுமல்லாமல், வனவிலங்குகளுக்கு நிழல், ஆக்ஸிஜன் மற்றும் வாழ்விடத்தை வழங்கும் ஒட்டுமொத்த மர விதானத்தையும் பாதிக்கலாம்" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இச்செதுக்குதலினால் சில ஆண்டுகளில் மரங்களை மாற்ற வேண்டி வரும் என்று நகரம் எதிர்பார்க்கிறது என்றும், இது வரி செலுத்துபவர்களுக்கு 8,000 டொலர்கள் வரை செலவை ஏற்படுத்தும் என்றும் கூறப்படுகின்றது.

# 4 லொத்தர் சீட்டுக்களின் பரிசுக்கு உரிமை கோராத வெற்றியாளர்கள்







கனடாவின் ஒன்றாறியோ மாகாணத்தில் லொத்தர் சீட்டிழுப்புக்களில் பரிசு வென்ற நான்கு பேர் இதுவரையில் பரிசுக்கி உரிமை கோரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒவ்வொருவரும் தலா ஒரு மில்லியன் டொலர்களுக்கு மேல் பரிசு தொகை வென்றெடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஹமில்டன், செத்தம் கென்ட், ஒன்றாறியோ ஆகிய மூன்று இடங்களில் விற்பனை செய்யப்பட்ட லொத்தர் சீட்டுக்களுக்கு பரிசு கிடைக்கப் பெற்றுள்ளன.

மேலும் இணைய வழியில் விற்பனை செய்யப்பட்ட லொத்தர் சீட்டுக்கும் ஒரு மில்லியன் டொலர்கள் பரிசு கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த பணப்பரிசு வென்றெடுத்தவர்கள் இதுவரையில் தங்களது பரிசைப் பெற்றுக்கொள்ளவில்லை என லொத்தர் சபை அறிவித்துள்ளது.




# லண்டன் பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் வீதியை விட்டு விலகி புதருக்குள் பாய்ந்தது

பல பயணிகளை ஏற்றிச் சென்ற லண்டன் ட்ரான்ஸிட் பஸ் மழையில் நனைந்து வழுக்கலாகக் காணப்பட்ட ஹைபரி அவென்யூவில் கட்டுப் பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி புதருக்குள் பாய்ந்தது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணியளவில் பஸ் தென் திசை யில் ஹாமில்டன் சாலையில் இருந்து கிழக்கு கமிஷனர்ஸ் சாலை நோக்கி பயணித்தபோது இந்த விபத்து ஏற் பட்டது.வாகனம் தனிவழிப் பாதையா நஹைபரியின் அதிவேகப் பிரிவின் நடுவில் பக்கவாட்டாக போய் நின் றது.

பல அவசரகால குழுக்கள் சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டன.

மிடில்செக்ஸ்-லண்டன் பாரா மெடிக்கல் சர்வீஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில்,

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணம் செய்த ஆறு பேர் சிறு காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல லப்பட்டனர்.

அவர்களின் காயங்கள் “உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தாதவை” என்று விவரிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸின் பின்பகுதியில் உள்ள இருக்கையில்தான் பயணித்தபோது, திடீரென வாகனம் கட்டுப்பாட்டை இழந்ததாக பயணி பசில் குராகோக் கூறினார்.

“எல்லோரும் கத்திக் குளறிக் கொண் டிருந்தனர்” என அவர் கூறினார்.

“பஸ் உருண்டு புரண்டிருக்கலாம், ஆனால் அதிர்ஷ்டவசமாக, அது நடக்கவில்லை. கடவுளுக்கு நன்றி.” - என்றார்.

# குரங்கம்மை நோய்த் தொற்றுக் குறித்து கனடாவிலும் மருத்துவர்கள் எச்சரிக்கை




ஆப்பிரிக்காவில் பரவி வரும் குரங்கம்மை நோய்த் தொற்று கனடா விற்கும் பரவக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய மருத்துவ நிபுணர்கள் இது தொடர்பில் எச்சரிக்கை விடுத் துள்ளனர். ஆபிரிக்காவின் சில நாடுக ளில் குரங்கம்மை நோய்த் தொற்று தீவிரமாகப் பரவி வருகின்றது.

இவ்வாறான ஒரு பின்னணியில் கனடாவில் இந்த நோய் பரவக்கூடும் என மருத்துவ நிபுணர்கள் தெரிவித் துள்ளனர்.

ஆபிரிக்காவுக்கு வெளியே பாகிஸ் தான் மற்றும் சுவீடன் ஆகிய நாடுக ளில் குரங்கம்மை நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கனடாவிற்கு சர்வதேச பயணிகள் வருகை தருவதும் பயணிப்பதும் அதிகமாக காணப்படுகின்றது என மருத்துவர் தெரிவிக்கின்றார்.

இதனால் கனடாவில் இந்த நோய்த் தொற்று பரவக்கூடிய அபாயத்தை மறுப்பதற்கில்லை என தெரிவித் துள்ளனர்.

உலக சுகாதார ஸ்தாபனம் குரங் குமை நோய்த் தொற்றை அவசரகால நிலையாக அறிவித்துள்ளது.

குரங்கமை நோய் தொற்றானது கோவிட் 19 பெருந்தொற்று போன்று இலகுவில் பரவக்கூடியது அல்ல என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் குரங்கமை நோயைக் கட்டுப்படுத்த தடுப்பூசிகள் உண்டு எனவும் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டு பயணங்களை மேற் கொள்ளும் போது அவதானமாக இருக்க வேண்டியது அவசியம் என அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.




# மிகவும் மோசமான வானிலையால் கனடாவில் பல பகுதிகள் பாதிப்பு

கனடாவில் கடுமையான வானிலை காரணமாக சில பகுதிகளில் மழை வெள்ளம் ஏற்பட்டுள்ளது, இதனால் அப்பகுதிகளில் மின்சாரம் தடை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் ரொறன்ரோ, மிசிசாகா மற்றும் நார்த் டம்ப்ரீஸ் டவுன்ஷிப் ஆகியன அடங்கும்.

சனிக்கிழமை, கனேடிய சுற்றுச் சூழல் அமைப்பு பல வானிலை எச்சரிக்கைகளை வெளியிட்டது. இதில் கனமழை எச்சரிக்கைகள் மற்றும் கடுமையான புயல் கண்காணிப்பு எச்சரிக்கைகள் அடங்கும்.

ரொறன்ரோவில், காலையில் மிகவும் கனமான மழை பெய்துள்ளது. மிசிசாகாவிலும் கனமான மழை பெய்து கொண்டிருக்கிறது. இந்த மழை நீண்டகாலம் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வாட்டர்லூ பகுதியில் சுழல்காற்று எச்சரிக்கை மற்றும் நார்த் டம்ப்ரீஸ் டவுன்ஷிப் பகுதியில் சுழல்காற்று தாக்கியதாகத் தகவல்கள் வெளியிடப்பட்ட பிறகு அப்பகுதிகளில் அவசர சேவைகள் உதவி வழங்கின.

இதனால் 3,000 பேர் மின்சாரம் இழந்தனர், மேலும் பல வீடுகள் மற்றும் தொழில்முறை இடங்கள் சேதமடைந்தன.

மிசிசாகா தீயணைப்புத்துறை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடமாடியோருக்கு உதவியது.

ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் வானிலை காரணமாக விமான சேவைகள் பாதிக்கப்பட்டன.

இந்தக் கடுமையான வானிலை காரணமாக, மக்களிடம் முன்னெச்சரிக்கையாக பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து விலகி, தங்கள் பயணத்தை திட்டமிட்டு பாதுகாப்பாக இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.






# பொலிஸாரின் சூட்டுக்கு எதிராகப் போராட்டம்!

## கனடாவில் எட்மாண்டனில்

கனடாவில் எட்மாண்டன் பகுதியில் பொலிஸாருக்கு எதிராகப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 28 வயதான இளம் தந்தை ஒருவர் கொல்லப்பட்டிருந்தார்.

இந்த சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

28 வயதான மாத்தியூஸ் அர்கான் ஜெலொ என்ற நபரே இவ்வாறு கடந்த ஜூன் மாதம் 29ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

தனது புதல்வர் தவறு இழைத்திருந்தால், அவரைக் கைது செய்து இருக்கலாம் என மாத்தியூஸின் தாயார் குறிப்பிடுகின்றார். உயிரைப் பறிப்பதற்கு பொலிஸாருக்கு உரிமை கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

தனது மகனுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கிடைக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் துப்பாக்கி சூட்டை மேற்கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர், இரண்டு மாத காலப் பணி இடைநீக்கத்தின் பின்னர் மீண்டும் சேவையில் இணைந்து கொண்டமை அதிர்ச்சி அளிப்பதாக அந்தப் பகுதி யைச் சேர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.







# வான்கூவர் பல்கலைக்கழகத்தில் 100 நாள்கள் இருந்த பாலஸ்தீன ஆதரவு முகாம் கட்டமைப்பு அகற்றப்பட்டது

வான்கூவர் தீவு பல்கலைக்கழகத்தில் 100 நாள்களுக்கு மேல் இருந்த பாலஸ்தீனிய ஆதரவு முகாம் கட்டமைப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை அகற்றப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த பாலஸ்தீனிய ஆதரவு முகாம் கட்டமைப்பை அகற்றுவதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்துக்குச் சாதகமாக பிரிட்டிஷ் கொலம்பியா உச்சநீதிமன்றம் இடைக்கால உத்தரவை விடுத்து அடுத்த 72 மணி நேரத்திற்குள் அந்தக் கட்டமைப்பு அகற்றப்பட்டது.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள நனைமோ வளாகத்தின் நாற்கரத்தை ஆக்கிரமித்திருந்த கூடாரங்கள், தார்ப்பாய்கள் மற்றும் பலகைகளால் நிரப்பப்பட்ட முகாமை அகற்றுவதற்கு எதிர்ப்பாளர்களுக்கு நேற்றுக் காலை 9:30 மணி வரை அவகாசம் அளிக்கப்பட்டிருந்தது.

பல்கலைக்கழகத் தொழிலாளர்கள் ஹஸ்மத் ஆடைகளை அணிந்து தளத்தை அகற்றத் தொடங்கியபோது, மாணவர் எதிர்ப்பாளர் சாரா கிஷாவி, வான்கூவர் தீவு பல்கலைக்கழகம் தனது மாணவர்களுடன் உரையாடலில் ஈடுபடுவதற்குப் பதிலாக நீதிமன்ற உத்தரவைப் பெறுவதற்கான முடிவை எடுத்தனையை விமர்சித்தார்.